## நெல்லையில் ரூ.33 கோடியில்

# பொருநை அருங்காட்சியக கட்டுமானப் பணி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, மே 20-**

**உலக அருங்காட்சியக தினத்தையொட்டி திருநெல்வேலியில் உலகத் தரத்துடன் அமைக்கப்படவுள்ள 'பொருநை அருங்காட்சியகம்' கட்டுமானப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.5.2023) தலைமைச் செயலகத்தில், உலக அருங்காட்சியக தினத்தையொட்டி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் திருநெல்வேலியில் 33 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு அமைக்கப்படவுள்ள "பொருநை" அருங்காட்சியகத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு காணொலி (Video Conferencing) வாயிலாக அடிக்கல் நாட்டினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.5.2023) தலைமைச் செயலகத்தில், உலக அருங்காட்சியக தினத்தையொட்டி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் திருநெல்வேலியில் 33 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு அமைக்கப்படவுள்ள "பொருநை" அருங்காட்சியகத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு காணொலி (Video Conferencing) வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், தொல்லியல் துறை இயக்குநர் சே.ரா.காந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம்!

தமிழ்நாட்டின் நாகரிகத் தொட்டிலாக கருதப்படும் ஆதிச்சநல்லூர், சங்க காலப் பாண்டியரின் துறைமுகமான கொற்கை, இரும்புக் காலத்தைச் சார்ந்த சிவகளை ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களை ஒரே இடத்தில் 'பொருநை நாகரிகம்' என்ற கருப்பொருளின் அடிப்படையில் திருநெல்வேலியில் நவீன வசதிகளோடு பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9.09.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்புரம் கிராமம், மேலப்பாளையம் ரெட்டியார்பட்டி மலைப்பகுதியில் தேசிய நெடுஞ்சாலையை யொட்டி அமைந்துள்ள 5.276 ஹெக்டேர் (13.02 ஏக்கர்) நிலப்பரப்பில் பொருநை அருங்காட்சியகம் அமைப்பதற்காக தேர்வு செய்யப் பட்டுள்ளது. இதில், சுமார் 10 ஏக்கர் பரப்பளவு அருங்காட்சியக மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்படும். 55,500 சதுர அடி பரப்பளவில்,

33 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பொருநை அருங்காட்சியகத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அடிக்கல் நாட்டினார்.

இந்த அருங்காட்சியக வளாகத்தில் கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர் மற்றும் நிர்வாகக் கட்டடம் என 4 முதன்மைப் பிரிவுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன. முற்றங்கள், நெடுவரிசைகள், தாழ்வாரங்கள் போன்றவற்றுடன் இப்பகுதியின் வட்டார கட்டடக்கலைத் தன்மையை பிரதிபலிக்கும் கட்டமைப்புகள், முகப்புகளில் உள்ளூர் கலை மற்றும் கைவினைத் திறனின் கூறுகளைப் பயன்படுத்திடவும் திட்டமிடப் பட்டுள்ளது.

### கொற்கை அகழாய்வு!

கொற்கையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்ணாடி மணிகள், கண்ணாடி வளையல்கள், சங்கு வளையல்கள், சுடுமண் மணிகள், அரிய கல் மணிகள், வட்டச்சில்லுகள், சுடுமண் உருவங்கள், இரும்புப் பொருட்கள், செம்புப் பொருட்கள், சுடுமண்ணால் செய்யப்பட்டு துளையிடப்பட்ட குழாய்கள், சங்க காலச் செப்புக்காசுகள், ரோம் நாட்டு அரிட்டன் வகை பானை ஓடுகள் மற்றும் சீன நாட்டு செலடன் வகை பானை ஓடுகள் ஆகிய தொல்பொருட்கள் மற்றும் செங்கல் கட்டுமானம் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன. மொத்தம் 812 தொல்பொருட்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன .

மேலும், வெள்ளி முத்திரைக் காசுகள், வடக்கத்திய மெருகூட்டப்பட்ட கருப்பு நிறப் பானை ஓடுகள் (Northern Black Polished ware), கங்கைச் சமவெளியைச் சார்ந்த கருப்பு வண்ணப் பூச்சுப் பெற்றுள்ள பானை ஓடுகள் ஆகியவையும் கிடைக்கப்பெற்றுள் ளன. கொற்கை கி.மு.8ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே துறைமுகமாக செயல்பட்டிருந்தது என்பதை முந்தைய அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற கரிமப் பகுப்பாய்வுகளின் காலக் கணக்கீடு முடிவுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**சிவகளை மற்றும் ஆதிச்சநல்லூர்**

சிவகளைப் பகுதியில் மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ள அகழாய்வுகளில் இதுவரை 160 முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 70க்கும் மேற்பட்ட இரும்பாலான கருவிகள், 787 படையல் கிண்ணங்கள், 163 குறியீடு பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட 5 பானை ஓடுகள் மற்றும் 582 தொல்பொருட்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. ஆதிச்சநல்லூர் பகுதியில் இரண்டு ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ள அகழாய்வுகளில் இதுவரை 27 முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 436 மட்கலன்கள் மற்றும் 1585 தொல்பொருட்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

சிவகளைப் பரம்பில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் ஈமத்தாழி ஒன்றில் சேகரிக்கப்பட்ட அரிசியினை காலக் கணக்கீடு செய்ததில் இதன் காலம் கி.மு. 1155 என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பொருநை நதிக்கரையில் (தாமிரபரணி ஆற்றங்கரை) வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தினரின் மேம்பட்ட பண்பாடு 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று உறுதி செய்ய முடிகிறது.

ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளையில் கிடைக்கப்பெற்றுள்ள அதிக அளவிலான உயர்தர தகரம் கலந்த வெண்கலம் மற்றும் தங்கத்தினாலான பொருட்களும், சடங்கு முறைகளும் அவர்களின் வளமான பொருளாதாரத்திற்கும் சமூக வாழ்க்கைநிலைக்கும் சாட்சியம் கூறுகின்றன.

தமிழ்நாட்டின் பண்டைய காலத்தில் சிறந்தோங்கி விளங்கிய ஆற்றங்கரை நாகரிகங்களில் ஒன்றான பொருநை ஆற்றங்கரையின் பெருமையை வெளிப்படுத்தும் முகமாக உலகத் தரத்துடன் அமைக்கப்படவுள்ள பொருநை அருங்காட்சியகத்தில் ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்த அரிய தொல்பொருட்கள் அழகுறக் காட்சிப்படுத்தப்படும்.

**'தமிழ்நாட்டு பண்பாட்டு மரபுகள் - இரண்டு தொகுதிகள் நூல் வெளியீடு**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் தமிழ்நாட்டின் தொன்மை மரபுகளை வெளிக்கொணரும் வண்ணம் புதுக்கோட்டை வட்டாரத்தில் காணப்படும் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் பேராசிரியர் கா. ராஜன், முனைவர் வி.ப. யதீஸ்குமார், முனைவர் முத்துக்குமார் மற்றும் முனைவர் பவுல்துரை ஆகியோர் நூலாசிரியர்களாக இணைந்து எழுதிய 'தமிழ்நாட்டு பண்பாட்டு மரபுகள் - புதுக்கோட்டை வட்டாரம்' என்ற இரண்டு தொகுதிகள் கொண்ட நூலினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், , தொல்லியல் துறையின் இயக்குநர் (மு.கூ.பொ.) சே.ரா.காந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞான திரவியம், சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. கா.ப. கார்த்திகேயன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் சரவணன், துணை மேயர் கே.ஆர். ராஜ், மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### ஜல்லிக்கட்டு - உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

## சட்டப் போராட்டம் நடத்திய முதல்வருக்கு பாராட்டு!

### இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிக்கை!

சென்னை, மே 20 .

ஜல்லிக்கட்டுக்கு தடையில்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளிக்க சட்டப் போராட்டம் நடத்திய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டுகளை இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச்செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஜல்லிக்கட்டு எனும் ஏறு தழுவுதல் விளையாட்டுக்கு தடை விதிக்க மறுத்து உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்திருக்கிறது. ஜல்லிக்கட்டு ஒரு பாரம்பரியமான விளையாட்டு என்பதையும், அந்தக் காளைகள் கண்ணின் மணியாய் காப்பாற்றி வளர்க்கப்படுகின்றன என்பதையும் காணத் தவறிய பீட்டா உள்ளிட்ட சில அமைப்புகள், இந்த வழக்கை உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு வரை எடுத்துச் சென்றது பொருத்தமற்றது.

தமது பண்பாட்டு நிகழ்வு ஒன்றை, பொருளற்ற எதிர்ப்பின் மூலம் தடுக்க முனைந்ததை எதிர்த்து தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு போராடினர். விடுதலைக்குப் பின் தமிழ்நாட்டில் நடந்த மிக முக்கியமான போராட்டங்களில் இதுவும் ஒன்றானது. பொதுமக்கள் இணைந்து போராடினால் அநியாயங்களை முறியடிக்க முடியும் என்பதற்கு இதுவும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

ஐந்து நீதிபதிகளை கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு, "பண்பாட்டு பாரம்பரியத்தை நீதித்துறையின் ஒரு பகுதியாக மாற்ற முடியாது" என அறுதியிட்டுக் கூறியிருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது. பாரம்பரிய விளையாட்டைப் பாதுகாக்க போராட்ட களத்தில் இறங்கிய மக்களுக்கும், சரியான தீர்ப்பைப் பெற சட்டப் போராட்டத்தை நடத்திய தமிழ்நாட்டு அரசுக்கும் பாராட்டுகளைத் தெரிவிக்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



திருப்பூர் தெற்கு மாவட்டம் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மூலனூர் ஒன்றியம், கிழங்கு ஊராட்சி, புத்தூர் கிராமத்தில் தாராபுரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி 2022–23ன் கீழ் ரூபாய் 7.77 லட்சம் மதிப்பீட்டில் 30000லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைக்கும் பணியை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் வைத்தேன் மூலனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் துறை தமிழரசு, பேரூராட்சி தலைவர், பேரூர் கழக செயலாளர் க.தண்டபாணி, மூலனூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் சுமதி கார்த்திக், குமாரபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் செல்லமுத்து உள்பட கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

### சிவகாசி பட்டாசு தொழிற்சாலையில் வெடி விபத்து

## உயிரிழந்த 3 பேரின் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

**சென்னை, மே 20 -**

**விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

அவரது அறிவிப்பு வருமாறு;-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே ஊராம்பட்டி கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு தொழிற்சாலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் குமரேசன் த/பெ.சுப்புராஜ், சுந்தர்ராஜ் த/பெ. ராம கிருஷ்ணன் மற்றும் அய்யம்மாள் க/பெ. கருப்பையா ஆகிய மூன்று பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி. இருளாயி க/பெ. சுந்தர்ராஜ் என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் திருமதி. இருளாயி அவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்களின் மக்கள் போற்றும் நல்லாட்சியை ஏற்று,பாப்பிரெட்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட கடத்தூர் கிழக்கு ஒன்றியத்தில் அ.தி.மு.க.வைச் சார்ந்த பெண்கள் உள்ளிட்ட 25 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் பி.பழனியப்பன் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் கடத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெப்போலியன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.